Story of the poets attached to the ancient Kings
Palani Puluvanar, Najappa High School, Tiruppur 23/1/66

"புலவர் வரலாறு"

கொங்கு வேளாளர் மத்தியில், புலவர் எனும் முறையில் சிலர் உண்டு. அப்புலவர்கள் கொங்கு வேளாளர் திருமண காலங்களில், அவர்கள் வீட்டில் வேளாளர் உன்கலத்தில் பாலும், பழமும் இட்டுச்சாப்பிட வேண்டும்; அப்படிச் சாப்பிடும் புலவர்கள், பண்பாடு இல்லாத, ஒழுக்கம் இல்லாததுமான வேளாளர் குடும்பங்களில் பால் சாப்பிட மாண்டார்கள்.

அப்படி பால்சாப்பிட மறுத்திடும் குடும்பங்களை உயர்ந்த வேளாளர்களாக கருதப்பட மாட்டார்கள். கொங்கு வேளாளர் திருமண காலங்களிலும் பிற சமயங்களிலும், எப்பொழுதும் இவர்கள் அவர்களால், போற்றப்படுவர். இப்புலவர் பலதிறத்தவர் ஆவர். அவர்களாவர், செங்குந்தர், சேரர், திருசிடி, சோழியர் என நான்கு வகைகள் உண்டு. இந்நால்வருக்கும் பால் அருந்தும் உரிமையும், கம்பளுக்குரிய வரியும், கொடுப்பது சம்பிரதாயம்.

இவர்களை அன்றி பிள்ளைப்புலவர் என மற்றொரு சாராரும் உண்டு. இவர்கள், வேளாளர் வீட்டில் தலைக்குழந்தை பிறந்த நாள் வந்து, வாழ்த்தி பரிசு பெறுவர். தற்காலத்தில் இவை குறைந்து வருகின்றன.

67 மேற்குறித்த புலவர்களுள், செங்குந்த மரபினர் ஒட்டக்கூத்தர் மரபைச் சார்ந்தவர் என்றும், சேரர்குலப்புலவர்கள் புகழேந்தி மரபைச்

சார்ந்தவர் என்றும் பேசப் பெறுகின்றது.

இப்பொழுதும் பழைய கோட்டை, சங்கரண்டாம் பாளையம் ஆகிய கொங்கு வேளிர் ஆதீனங்களில், இப்புலவர் பரம்பரையினர் இருந்து வருகின்றனர்.

சோழ அரசர்கட்கு, ஒட்டக்கூத்தர் ஆசிரியராகவும், அவைப்புலவராகவும் இருந்தார். அக்காரணத்தால் சோழ வேந்தரைச் சார்ந்த வேளிர்க்கு, ஒட்டக்கூத்தர் பரம்பரையினர் ஆசிரியராகவும் பரம்பரைப் புலவராகவும் இருந்து வருகின்றனர். பாண்டியர்க்கு, புகழேந்தி அவைக்களப்புலவர். அவரைச் சார்ந்தே சேரகுலப் புலவரை கொண்டுள்ளனர்; அதேபோல் திருமுடி, சேரனி ஆகியோர் வரலாறு அதிகம் இடம் பெறவில்லை.

கம்பனுக்கு கையேட்டாளராக இருந்த பல புலவர்களும், சிலசமயங்களில், இக் கொங்கு நாட்டில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள், திருமணச் சீர் கொங்குவேளாளரை ஒத்ததே.